# ஙாரி திபெத்தியர்கள் (Tibetans, Nghari)




**வசிப்பிடம்:** சுமார் 50,000 மக்கள்தொகை மட்டுமே கொண்டிருந்தாலும் ஙாரி திபெத்திய மொழி மேற்கு திபெத்தின் மிகப் பரந்த பகுதிகளில் பேசப்படுகிறது. ஙாரி மாகாணம் இமயமலையின் வடக்கில் கடல் மட்டத்திலிருந்து 4,500 மீட்டர்கள் (14,760 அடிகள்) உயரத்தில் உள்ளது, இதன் பரப்பளவு 306,000 சதுர கிலோமீட்டர்கள் (119,340 சதுர மைல்கள்) ஆகும். வட நேபாளிலும் கணக்கிடப்படாத எண்ணிக்கையுடைய ஙாரிக்கள் வாழ்கின்றனர்.

**அடையாளம்:** ஙாரி பகுதியில் வாழும் திபெத்தியர்கள் சங்தங் (Chang Tang) என்றும் அழைக்கப்படுகின்றார்கள். ஏறக்குறைய எல்லா ஙாரிக்களும் கொடூரமான குளிரோடு போராடிக்கொண்டு வாழும் நாடோடி மேய்ப்பர்களாவார்கள். கடந்த 1,000 வருடங்களில் இவர்களுடைய வாழ்க்கை முறை சிறிதே மாறியுள்ளது, இன்றும் இவர்கள் மிகக்குறைந்த இயந்திரங்களையும் தொழில்நுட்பங்களையும் மட்டுமே பயன்படுத்துகின்றனர்

**மொழி:** இன அடிப்படையில் இவர்கள் திபெத்தியர்களாயிருந்தாலும், இவர்கள் பேசும் மொழி மற்ற திபெத்திய வகைகளைக் காட்டிலும் வித்தியாசமானது. ஙாரி திபெத்திய மொழியில் இவர்களுடைய முக்கியப் பட்டணங்களின் பெயர்களின்படி பெயரிடப்பட்ட ஏழு வட்டார மொழி வழக்குகள் உள்ளன. திபெத்திய மொழியில் 30 மெய்யெழுத்துக்களும் 4 உயிரெழுத்துக்களும், சமஸ்கிருத வார்த்தைகளை எழுத 6 குறியீடுகளும் உள்ளன.

வரலாறு: புத்த மதம், இந்து மதம், ஜைன மதம் மற்றும் பொன் மதம் ஆகிய நான்கு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மேற்கு திபெத் ஒரு புனித ஸ்தலமாகும். ஒவ்வொரு வருடமும் 6,714 மீட்டர்கள் (22,021 அடிகள்) உயரமுடைய கைலாஷ் மலைக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். கலாச்சாரப் புரட்சியின்போது (கி.பி.1966–76) இங்குள்ள 13 புத்த மடங்களில் 10 மடங்கள் இடிக்கப்பட்டன.

**பழக்கவழக்கங்கள்:** பெரும்பாலான திபெத்தியர்கள் விரும்புவது ஆகாயச் சவ அடக்க (Sky Burial) முறையாகும். சவம் துண்டுதுண்டாக வெட்டப்பட்டு பிணந்தின்னிக் கழுகுகள் மற்றும் காகங்கள் உண்ணப் பாறைகள்மேல் வைக்கப்படுகிறது. கி.பி.1980 ல் சுற்றுலாப்பயணிகள் மறைந்திருந்து இந்தச் சடங்கைப் புகைப்படம் எடுக்க முயற்சித்தனர். 'ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒருவர் தொலைதூரப் புகைப்படக் கருவியைக்கொண்டு ஒளிந்திருந்து புகைப்படமெடுக்க முயற்சி செய்தார். இங்கும் அங்கும் அவர் தாவும்போது பறவைகளைப் பயப்படுத்தித் துரத்திவிட்டார்; திபெத்தியர்களுக்கு இது மிகவும் கெட்ட சகுனமாகும். கோபமடைந்த கூட்டம் கத்திகளோடு அவரைத் துரத்தி அவர்மேல் கல்மழை பொழிந்தது. மற்றுமொரு சுற்றுலாப்பயணிகளின் குழுவை, சவத்தின் காலையும் கத்தியையும் காட்டிக் கல்லெறிந்து துரத்தினார்கள்.'

**மதம்:** மற்றெல்லாத் திபெத்தியர்களைப்போல இவர்களும்புத்தமதத்தைப்பின்பற்றுகின்றார்கள். சூனியம் மற்றும் மந்திர தந்திரங்களும் வழக்கத்தில் உள்ளது. கைலாசத்தில் உள்ள இரு ஏரிகளில் ஒன்றில் மூழ்கி எழும்போது எல்லாப் பாவங்களும் கழுவப்படுவதாக நம்புகின்றார்கள். டோல்மா கணவாயை (Dolma Pass) (18,500அடிகள்) கடந்து போகும் பக்தர்கள் மறு பிறப்பு அடைந்ததாக நம்பப்படுகிறது. சாதாரணத் திபெத்திய மக்கள் நரகம் எட்டு வெப்பமான மற்றும் எட்டு குளிரான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாக நம்புகின்றார்கள். பாவிகள் தங்களுடைய குற்றங்களுக்குரிய தண்டனையைச் சுமந்து தீர்க்கும் மட்டும் இங்கே கஷ்டப்பட வேண்டும் என்பது இவர்களின் நம்பிக்கை ஆகும்.

**கிறிஸ்துவம்:** முதல் திபெத்திய சபை கி.பி. 1726 ல் லாசாவில் ஜேஸூஇட் மிஷனெரிகளால் கட்டப்பட்டது. சபை ஆராதனையில் 20 ஞானஸ்நானம் எடுத்த விசுவாசிகளும் 60 ஞானஸ்நானம் எடுக்காதவர்களும் கலந்துகொண்டார்கள். 'கி.பி.1742 ன் ஏப்ரல் மாதத்தில், பு ஷிரிங் (Pu Tsering) என்ற ஒரு புது விசுவாசி எல்லாருக்கும் முன்பாக, தலாய் லாமாவிற்கு முன் பணிந்துகொள்ள மறுத்துவிட்டார்... இது பட்டணத்தில் கலகத்தைத் தூண்டியது. பன்னிரண்டு கிறிஸ்தவர்களுக்கு 20 சவுக்கடி கொடுக்கப்பட்டது. மிஷனெரிகள் நேபாளுக்குத் தப்பியோடினர். ஆனால் ஆலயமணியைத் தவிர முழுச் சபை கட்டிடமும் இடித்து நொறுக்கப்பட்டது.' இந்நாட்களில் அறியப்பட்ட ஙாரி கிறிஸ்தவர்கள் யாருமில்லை.




**Population:**
49,900 (2000)
61,500 (2010)
75,700 (2020)

**Countries:** China, Nepal
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Nghari, Ngharis, Mngharis, Drokpa, Drokwa, Drokba, Chang Tang Tibetans, Chang Tang Nomads
**மக்கள்தொகை:** 38,400 in China (1987, Language Atlas of China), also in Nepal
**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய,ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, வட திபெத்திய மொழி
**மொழி வழக்குகள்:** 7 (Rutog, Gartok, Zamda, Burang, Coqen, Gerze, Xigaze)
**திபெத்திய புத்தமதம்:**100%
**கிறிஸ்துவம்:** 0%
**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி.1862,புதியஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948
**இயேசுதிரைப்படம்:**இல்லை
**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை
**கி. அலைபரப்புகள்:**இல்லை
ROPAL **குறியீடு :** TIC03

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்